பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 17 சனிக்கிழமை 01.03.2025 கதிர் 113

### இனி இது ரகசியம் அல்ல!

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவானாம் என்றொரு சொலவடை தமிழில் உண்டு. கூரைக்கே ஏற முடியாதவன் வானம் ☞ 2

யாழ்ப்பாணத்தில்

## இளைஞர்களுக்கு இராணுவம் போதைப்பொருள் வழங்குகிறது

### சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

இராணுவத்தில் நான்கில் மூன்று பங்கினர் வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் உணவகம் ஒன்றை நடத்துவதுடன் அங்கு இராணுவத்தினரால் இளைஞர்களுக்கு போதைப்பொருட்களும் வழங்கப்படுகின்றன. சில இளைஞர்கள் அந்த இராணுவ உள்ளாடைகளுடன் இருந்ததை நான் என் கண்களால் கண்டேன் என்று இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புத் தரப்பினரால் ☞ 7

புலிகள் காலத்தில் இல்லாதிருந்த

## போதைப்பொருளின் ஊடுருவல் அதிகரிப்பு

### ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் ஊடுருவல்கள் தற்போது அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறான சட்டவிரோத போதைப்பொருட்களின் ஊடுருவல்களால் மக்கள் பலர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், திருட்டுக்கள், சட்டவிரோத செயற்பாடுகள், சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்ததார். ☞ 8

## வடக்கு கிழக்கில் ராணுவ குவிப்புத்தான் இந்த ஆளும்தரப்பின் கொள்கையும்கூட

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் இராணுவத்தை குவித்து வைத்திருக்க வேண்டும் என்ற முன்னைய ஆட்சிகளின் கொள்கையையே இந்த ஆளும்தரப்பும் பின்பற்றுகிறது. இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு மட்டுமே போதும். வடக்கு, கிழக்கில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளை நாங்கள் ஆலோசனை குழு மற்றும் நாடாளுமன்றத்தில் பேசினாலும் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. மாற்றங்கள் செய்யாது இனவாதம் அழிக்கப்படும் என்று கூற முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு ☞ 2

## ஆளும்தரப்பினைக் கவிழ்க்கும் எதிரணியின் கனவு பலிக்காது

### ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் பாதுகாப்பு இல்லை என்ற எண்ணத்தை உருவாக்குவதன் மூலமோ, பொதுமக்கள் கிளர்ச்சியை உருவாக்குவதன் மூலமோ, ஆளும் தரப்பைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் காணும் கனவுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.



அவர் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார். 2025 வரவு செலவுத்திட்டத்தின் பாதுகாப்பு, ☞ 2

## ரமழான் நேன்பு நாளை ஆரம்பம்

புனித ரமழான் நோன்பு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிப்பதாக கொழும்பு பெரியபள்ளிவாசல் அறிவித்துள்ளது. ஹிஜ்ரி 1446 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. ☞ 7

கொலைக் குற்றச்சாட்டில்

## முன்னாள் பொலிஸ் மா அதிபரை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

### தேசபந்து உட்பட அறுவர் சந்தேகநபர்கள்

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட கொழும்பு குற்றப்பிரிவின் ஆறு அதிகாரிகளை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறும் அவர்களை வழக்கின் சந்தேகநபர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாறும் மாத்தறை நீதிவான் அருண புத்ததாச உத்தரவிட்டார்.

ஒரு வருடத்திற்கு முன்பு மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் வெள்ளைவானில் வந்த ஒரு குழு துப்பாக்கிச் சூடு நடத்தியபோது, வெலிகம காவல்துறையினர் ☞ 7

## கடந்தகால கொலைக் குழுக்களுக்கு இந்த ஆளும்தரப்பு அஞ்சுகின்றதா?

### நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. கேள்வி

கடந்த காலங்களில் கொலைகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபட்ட குழுக்களுக்கு ஆளும்தரப்பு அஞ்சுகின்றதா என்ற சந்தேகம் நிலவுகின்றது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் சாணக்கியன்



தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு, செலவு திட்ட பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுகளின் செலவு தலைப்புகளின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் 'திரிபோலி பெட்ரோன்' ஊடாக இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் இந்த நாடாளுமன்றத்தில் அடிக்கடி கூறியுள்ளேன். ஆனால் இது தொடர்பில் எவ்வித ☞ 7

## வழக்குகளின் தாமதம் குறித்து நாடாளுமன்றத்தில் ஆராய்வு

நீதிமன்றக் கட்டமைப்பில் தீர்க்கப்பட வேண்டியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், சட்டத்தை நிலைநாட்டும் செற்பாட்டில் காணப்படும் கணிசமான காலதாமதம் தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைபாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, உயர்நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட வேண்டிய 5,785 வழக்குகள் நிலுவையில் இருப்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 4,572 வழக்குகளும், குற்றவியல் வழக்குகள் விசாரிக்கப்படும் மேல்நீதிமன்றங்களில் 6,286 வழக்குகளும், வணிக மேல்நீதிமன்றங்களில் 6,146 வழக்குகளும், மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்களில் 3 வழக்குகளும், மேல் நீதிமன்றங்களில் 27,324 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றங்களில் ☞ 8

## மீளாய்வின் பின்னர் காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும். அத்தியாவசியமான இராணுவ முகாம்களை தவிர்த்து ஏனையவற்றை நீக்குவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார். ☞ 7

## இனி இது .....

ஏறிப் போவேன் என்று சொல்லும் கதை நம்பக்கூடியதா என்பதை எள்ளி நகையாடும் வழக்கு அது. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் செய்திருக்கும் காரியத்தைப் பார்க்கும்போது இந்தச் சொலவடைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாகச் செயற்படுவதற்கு ஒன்றிணையுமாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எழுத்து மூலமாக ஒவ்வொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனித்தனியாக கடிதம் அனுப்பியுள்ளார்.

"தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாக ஒன்றுபட்டு, ஒன்றிணைந்து செயற்படுதலின் தேவையையும் முக்கியத்துவத்தையும் அறிந்து தெளிந்து உணர்ந்து பொதுவான விடயங்களில் ஒன்றுபட்டு செயற்படுவது சாலச்சிறந்தது. இந்த குழுவை நம்மத்தியில் உருவாக்கி செயற்பட தங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பினையும் வேண்டி நிற்கின்றேன்.

இது தமது இனத்தின் பிரச்சினைகளைச் சீர்தூக்கிப்பார்த்து கலந்துரையாடி முடிவுகளை எடுக்க உதவும் என்று நம்புகின்றேன். இவ்வாறான ஓர் குழுவாக நாடாளுமன்றத்தில் செயற்பட உங்களது மேலான ஒத்துழைப்பைத் தருமாறு வேண்டி நிற்கின்றேன்'' என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இன்னும் சொல்லப்போனால் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் (அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள்) ஒன்றிணைந்து செயற்பட்டால் அது சிறப்பானதுதான். கருத்தியல் ரீதியில் சிறப்பான இந்த விடயத்தை செயற்படுத்துவது என்பது குதிரைக் கொம்புதான். கூடி பேசி, மது அருந்திக் கலைவதற்கு வேண்டுமானால் இந்த ஒற்றுமை பயன்படலாமே தவிர, தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிந்து தீர்க்க இரு ஒருபோதும் உதவாது. இன நலனை அன்றி, தமது சொந்த நலன்களையும் கட்சி நலன்களையும் முன்வைத்தே அரசியல் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைவதென்பது கானல் நீர் மட்டுமே. தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்கு மட்டுமே இந்த ஒற்றுமைக் கோசம் உதவும்.

அதற்கான மிகச் சிறந்த அண்மைய உதாரணம் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு. இந்தக் கட்டமைப்புக்குள் 7 கட்சிகள், 7 குடிமைச் சமூகங்கள் (சிவில் அமைப்புக்கள்) சேர்ந்திருந்தன. ஜனாதிபதித் தேர்தலையொட்டி இந்த அமைப்பு ஒரு தமிழ் வேட்பாளரையும் நிறுத்தியது. ஆனால் கூட்டுக்குள் இருந்தபடியே ஆளும்தரப்புடன் 'டீல்' முடித்தவர்கள் தமது சொந்த வேட்பாளருக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வேலை செய்தார்கள் அல்லது தமது வேட்பாளருக்கு ஆதரவாக வேலை செய்யாமலேயே இருந்தார்கள் என்பது வரலாறு.

தமிழீழம் கேட்டுப் புறப்பட்ட ரெலோவின் தலைவர் தற்போதைய வரவு செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தார். வடக்கு கிழக்கைச் சேர்ந்த எதிர்க்கட்சி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிப்பிலிருந்து விலகியிருக்க இவர் மட்டுமே ஆதரித்து வாக்களித்தார். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கொண்ட ஆளும்தரப்புக்கு இவரது ஆதரவு தேவையில்லை என்றபோதும், வலிந்து தானாகவே முன்வந்து, அதுவும் 2ஆவது வாசிப்பிலேயே ஆதரவளித்துள்ளார். (இந்த விசுவாசத்திற்குக் காரணமான பின்னணி வேறு உள்ளது என்று நாடாளுமன்றத்தில் பேச்சடிபடுவது தனிக் கதை). இப்படி தமிழ் இனத்தை முன்வைத்து ஒரு வரவு செலவுத் திட்டத்தில்கூட, தமிழ்த்தேசியத்தை வாயளவில் பேசும் கட்சிகளே ஒருமித்த முடிவை எடுக்க முடியாத நிலையில் (கூரையே ஏற முடியாத நிலையில்) அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து தமிழ் இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் செயற்படுவது என்பது வான் ஏறி வைகுந்தம் போகின்ற கதைதானே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆளும்தரப்பினைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சின் செலவினங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆளும்தரப்பு காட்டுமிராண்டித்தனத்தின் சகாப்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, நாகரிகத்திற்கு வழி வகுத்துள்ளது. முடிந்தால் தற்போதைய ஆளும்தரப்பின் நாகரிகத்தை மிஞ்சிச் செல்லுமாறும் எதிர்க்கட்சிகளுக்குச் சவால் விடுகின்றேன்.

அவ்வாறு இல்லாமல் பழைய அரசியலிலே இருந்தால் அரசியலை விட்டு விலகுவதை தவிர்க்க முடியாது. பாதாள உலகின் குற்ற குழுக்களுக்கு தற்போதைய ஆளும்தரப்பின் எந்தவொரு உறுப்பினரினதும் ஆசிர்வாதமும் கிடைக்காது.

இலங்கை இராணுவத்தையும் பொலிஸையும் தொழில்சார்புடைய இராணுவமாகவும் பொலிஸாகவும் மாற்றுவோம். பாதுகாப்புதுறையின் எந்தவொரு இடமாற்றத்தையும் நட்பு மற்றும் அரசியல் அடிப்படையில் செய்யப்போவதில்லை.

முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கு ஏழு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இப்படி சகாக்களுக்கும் நண்பர்களுக்கும் நியமனங்களை வழங்குவதால் புதிய பயணத்தில் செல்ல முடியாது என்பதால் புதியவர்களுக்கு நியமனங்கள் வழங்கியிருக்கின்றோம்.

ஒருவருக்கு மட்டுமே பக்கச் சார்பான இராணுவத்திற்குப் பதிலாக நாட்டுக்கு சார்பான இராணுவம் ஒன்றை உருவாக்கவும் அதன் தொழில்சார்பு தன்மையை மேம்படுத்தவும் தற்போதைய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

காலத்தால் மறைந்திருக்கும் குற்றச்செயல்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்க தற்போதைய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும். அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய ஆளும்தரப்பு எடுக்கும்.

பாதுகாப்புதுறையின் கட்மைப்பின் மீதான நம்பிகையின் அடிப்படையிலேயே ஒழுக்கம் கட்டியெழுப்பப்படும். ஒழுக்கயீனத்தின் பாதாளம் வரையில் சென்றுள்ள இந்த நாட்டை மீண்டும் ஒழுக்கத்தை நோக்கி கொண்டுச்செல்ல தற்போதைய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும்.

பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் எதிர்க்கட்சியின் கனவு தற்போது முற்றுப்பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் நெருக்கடியிருப்பதாகக் காண்பித்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் எதிர்கட்சி தற்போது இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது.

இம்மாதத்தில் நடந்த ஐந்து குற்றச் செயல்களை விசாரணை செய்யும்போது ஐந்து குழுக்களினால் அந்த குற்றச்செயல்கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது. விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமது பக்கம் விசாரணைகள் வருவதை குற்றச் செயல்களை செய்வோர் அறிந்துகொள்கின்றனர். அவ்வாறு பல குற்றக் குழுக்கள் ஒரே சமயத்தில் இயங்குவது சூழ்ச்சியாக இருக்குமா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த சூழ்ச்சியை அறிந்துகொண்டு அதனை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் சூழ்ச்சிகளால் ஆட்சி மாற்றம் செய்த காலம் முடிந்துவிட்டது. அரச நிறுவனங்கள் மற்றும் அரசியல் அதிகார தரப்பைக் குற்ற குழுக்கள் அற்றதாக்கும் சமூகத்தை கட்டியெழுப்ப உள்ளோம்.

பாதுகாப்புத் துறையினரின் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விமானப்படை மற்றும் கடற்படைக்கு அவசியமான ஊர்திகளைக் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பொலிஸ் திணைக்களத்தின் வசதிகளை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். மேலும், விமானப்டைக்கும் பொலிஸ°க்கும் தலா 10,000 பேரை ஆட்சேர்ப்பு செய்ய இம்முறை வரவு செலவு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி மூலம் ஆதரவளிக்கப்படும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்த திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு அறிக்கை அந்த நிதியத்தின் நிர்வாக சபைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் நல்லதொரு பயன் கிடைக்கும் என நான் நம்புகின்றேன்.

நீங்கள் கற்பனை செய்கிறீர்கள் என்றால், பொருளாதார நெருக்கடி மூலம் ஆட்சியை கைப்பற்றலாம் என்று. அது தற்போது முடிந்துவிட்டது. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களால் ஆட்சிகள் கவிழ்ந்துள்ளன. பொருளாதார நெருக்கடியால் ஆட்சியை வீழ்த்துவோம் என்பது ஒரு கனவு மட்டுமே. அது நடக்காது. அதற்காக வார்த்தைகளையோ, நேரத்தையோ வீணாக்க வேண்டாம்.

அவை நடக்கப்போவதில்லை. அடுத்து, எங்கள் நாட்டில் ஆட்சிகள் வீழ்ந்த வரலாறு உள்ளது, கட்சிகளுக்குள் நெருக்கடிகளை உருவாக்கி. 2001இல் சந்திரிகா அம்மையாரின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது. முக்கிய காரணம், ஆட்சியில் இருந்த சிலர் எதிர்த்தரப்புக்கு சென்று அமர்ந்தமையே. ஆட்சிக்கு உள்ளே ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக ஆட்சிகள் வீழ்ந்த சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆனால், இந்த ஆட்சி, எந்தவித உள் முரண்பாடுகளும் உருவாகாத ஒரு ஆட்சி. சிலர் என்னை உயர்த்தி, நாடாளுமன்றத்தில் உள்ள மற்றவர்களை தாழ்த்த முயற்சிக்கிறார்கள். நாங்கள் அதற்குள் சிக்கப்போவதில்லை.

''அவர் நல்லவர், மற்றவர்கள் மோசமானவர்கள்'' என்று சொல்வது ஒரு பொறிதான். அந்தப் பொறிகளுக்கு நாங்கள் சிக்குவோமா? உள்நெருக்கடி மூலம் ஆட்சியை வீழ்த்தலாம் என்று நினைக்கிறீர்கள் என்றால், அதுவும் நடக்காது.

பின்னர், நீங்கள் கற்பனை செய்கிறீர்கள், தேசிய பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு இந்த ஆட்சி வீழ்ச்சியடையும் என்று. அதுவும் நடக்காது. எனவே, உங்களுக்கு புதிய துருப்புச் சீட்டுகள் தேவைப்படும்; ஒரு ஆய்வு செய்ய வேண்டும்.

அடுத்து, மக்கள் வீதிக்கு இறங்கி, போராட்டங்கள் நடத்தி, ஆளுபவர்களை விரட்டிய வரலாறு உள்ளது. உங்களால் ஊடக சந்திப்புகள் மூலம் ஏதாவது சொல்வதைத் தவிர, சபையில் ஏதாவது சொல்வதைத் தவிர, மக்களை ஒன்றுதிரட்டி ஏதாவது சொல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை. எனவே, மக்கள் எதிர்ப்பு மூலம் ஆட்சியை விரட்டலாம் என்று கற்பனை செய்கிறீர்கள் என்றால், அவை அனைத்தும் தோல்வியடையும்.

2030 ஆம் ஆண்டளவில் எமது இராணுவத்தை ஒரு இலட்சத்திற்கு மட்டுப்படுத்துவோம். விமானப்படையை 18,000 என்ற எல்லைக்கு கொண்டு வருகிவோம். கடற்படையை 40,000 என்ற எல்லைக்கு கொண்டு வருகிவோம். எண்ணிக்கை குறைகிறது. ஆனால், தொழில்நுட்ப ரீதியாக உயர்ந்த படையாக எமது இராணுவத்தை மாற்றுவதற்காக நாங்கள் பணியாற்றுகிறோம் - என்றார்.

# வரிக்கு மேல் வரி விதித்து நியாயமற்று நடக்கின்றது

## ஆளும்தரப்பு மீது சஜித் பாய்ச்சல்

தற்போதைய ஆளும்தரப்பு வரிக்கு மேல் வரி விதிக்கும் தரப்பாக நடந்து வருகிறது. வற் (VAT) வரி மட்டுமின்றி இன்னும் பல நேரடி மற்றும் மறைமுக வரிகளை மக்கள் மீது சுமத்தி, மக்களைப் பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தி வருகிறது. சேவை ஏற்றுமதி துறைக்கு 15 சதவீத புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் டொலர் பற்றாக்குறைக்கு தீர்வு ஏற்றுமதி ஊக்குவிப்பாகும். ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு பதிலாக வரி விதிப்பது நியாயமற்றது. நாட்டின் பொருளாதார நிலை, நாட்டின் டொலர் பற்றாக்குறை மற்றும் அன்னிய செலவாணிக் கையிருப்பு தொடர்பில் போதிய விளக்கம் இல்லாததால் இவ்வாறு நியாயமற்ற வரிகள் விதிக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அனுராதபுர நகரில் நேற்று மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

அதிகளவில் வரி விதிப்பின் ஊடாக, பண மோசடி ஏற்பட இடமளிக்கப்படுகிறது. இதனால் நாட்டிற்கு பாதகமே விளையும். உண்டியல், ஹவாலா போன்ற முறைகள் மூலம் பணப் பரிவர்த்தனை செய்யும்போது, நாட்டுக்குச் சேர வேண்டிய வருமானம், அந்நியச் செலாவணி இழக்கப்படுகிறது. கைத்தொழில் அமைச்சராக இருக்கும் அமைச்சர் ஹதுன்நெத்தியே இந்த வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த வரிக்கு எதிர்ப்பு என்றால் அவர் எவ்வாறு அமைச்சரவையில் இருக்குறார் என்று அவரிடம் நான் கேள்வி எழுப்புகிறேன். நாட்டு மக்களை ஏமாற்றி, இளைஞர்களின் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையையே இந்த ஆளும்தரப்பு முன்னெடுத்து வருகின்றது.

சிறந்த தொலைநோக்குப் பார்வையும், திட்டத்தையும் கொண்ட ஓர் அரசியல் தரப்பில் நாம் சேரவேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் திறமையான வேட்பாளர்களுக்கு நாம் இடமளிப்போம். நல்லவர்களை அரவணைத்துக்கொள்வோம்.

நீதிமன்றங்களுக்குள்ளும் கொலைகள் நடக்கின்றன. இது தொடர்பாக நாட்டில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளது. இது குறித்துச் சபையில் பேசும் போது சபாநாயகர் தடங்கல் ஏற்படுத்துகிறார். தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றைப் புரிந்துகொண்டு தீர்வு காண ஆளும்தரப்பிற்கு முடியவில்லை. இதனால் பல்வேறு தடங்கல்களை ஏற்படுத்தி வருகின்றனர். ஆளும்தரப்பு மக்களைத் தவறாக வழிநடத்துகிறது என்பது தெளிவாகிறது. பேசுபவர் எவ்வாறு பேசினாலும் கேட்பவர் புத்திசாலித்தனமாகக் கேட்கவேண்டும். தெளிவான அதிகாரம் இந்த அரசிடம் காணப்படுகிறது.

அர்ஜுன் மகேந்திரனின் பிரச்சினையும் இவ்வாறானதே. ஆளும்தரப்பு இவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்வரை மக்களுக்கு இது தொடர்பில் நாம் தெளிவூட்டிக்கொண்டே இருப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வரவு, செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்காக 434 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த வரவு, செலவுத்திட்டங்களை விடவும் மூன்று மடங்கு அதிகரிப்பாகும். பாதுகாப்புக்கு வழங்கியுள்ள முன்னுரிமையைப் பார்க்கும்போது பாதுகாப்பு படையினரைப் பலப்படுத்துவது போன்றே உள்ளது. நாட்டில் 16 வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் பாதுகாப்புத் தரப்பை பலப்படுத்துவதே இந்த ஆளும்தரப்பின் நோக்கமாக உள்ளது என்பது வெளிப்படுகிறது.

சமூக நலன்புரிகளை விடவும் அதிகளவில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சமூக நலன்புரி வீழ்ச்சியடைந்த நிலையிலேயே இருக்கின்றது. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 42 பில்லியன் ரூபா 35 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. பொருளாதார வீழ்ச்சி மற்றும் பொருளாதாவிலையேற்றத்தால் மக்கள் பாதிக்ககப்பட்டுள்ள நிலையில் உதவித் தேவைப்படும் துறைகளை விட்டுவிட்டு வேறு விடயங்களுக்கு அதிகளவில் ஒதுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. முன்னைய ஆளும்தரப்பு சமூக நலன்புரிகளுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று கூறியவர்கள் இப்போது அதனையே செய்கின்றனர்.

சிலர் இங்கே உரையாற்றும்போது பாதுகாப்பை பலப்படுத்த வேண்டியதன் நோக்கத்தை குறிப்பிட்டிருந்தனர். பொதுவாக ஒவ்வொரு நூறு குடிமகனுக்கும் 1.55 விகித பாதுகாப்பு படையினர் இருக்கவேண்டும் என்றே புள்ளி விபரமொன்று குறிப்பிடுகின்றது.

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# விழிப்பூட்டல் செயலமர்வு சாய்ந்தமருதில்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாய் சேய் நல மேம்பாட்டை கருத்தில் கொண்டு பொது சுகாதார மருத்துவ மாதுக்களின் சேவையை வினைதிறன் மிக்கதாக மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 'கர்ப்பத்தினால் தூண்டப்பட்ட உயர் குருதி அமுக்கம்' குறித்த விழிப்பூட்டல் செயலமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் விளக்க உரை ஆற்றினார். ஏற்கனவே சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களுக்கு தொழில் தேர்ச்சிக்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய பயிற்சிகள் வாராந்தம் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார தாதிய சகோதரி, மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசதி குறைந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும்,தூர இடங்களில் சென்று கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்காக வேண்டியும் இஸ்லாமிக்ரிலீப் கனடா நிறுவனத்தின் சுமார் இரண்டு மில்லியன் நிதிப் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட 53 மாணவர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் நிதி இணைப்பாளர் பௌஸான் ரிஸ்னி, சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.எம்.எம் அரபாத், உதவிக் கல்விப் பணிப்பாளர் பரமதயாளன், இஸ்லாமீக் ரிலீப் நிறுவனத்தின் சிரேஸ்ட திட்ட உத்தியோகத்தர் எஸ்.எல்.ஏ சியாஸ், திட்ட உத்தியோகத்தர்களான எம்.எச் ஆசாத், எப் சஸ்னா உட்பட கிராம சேவகர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



வாழ்வாதரத்தின் ஊடாக கல்வியை மேம்படுத்துவோம்எனும்செயற்திட்டத்தின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்ட்டுக்காக பல்வேறுபட்ட உதவிகள் வழங்கியுள்ள நிலையில் அவ் குடும்பங்களில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக இந்த உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# வவுனியா பல்கலைக் கழகத்தில் தொழில் வாய்ப்பிற்கான பயிற்சி

இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனங்களால், வவுனியா பல்கலைக்கழகத்தில் தொழில் வழிகாட்டல் அலகின் ஒருங்கிணைப்புடன், ஐந்து நாட்கள் 'தொழில்வாய்ப்பிற்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை' நடத்தப்பட்டது.

ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட இப்பயிற்சிப்பட்டறையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்விப் பீடத்தைச் சார்ந்த சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 35 மாணவர்கள் பங்குபற்றி தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை திறன்கள் தொடர்பில் பங்கேற்றல் முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்பிற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

பயிலுனர்கள் இப்பயிற்சியில் தங்களது வாண்மைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பிலும், தொழில்ரீதியாக தயார்படுத்துவதிலும் ஊக்கமெடுத்து, தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார்கள். ஒவ்வொரு பயிலுனரும் தமது வாழ்வின் அர்த்தம் (இகிகாய்-ஜப்பானிய சொல்) பற்றி சிந்தித்து, சுயவிருத்தி திட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

நீண்ட கால அடிப்படையில் தொடர் கண்காணிப்புடன் ஒரு வருட நிகழ்ச்சித்திட்டமாக செயற்படுத்தப்பட்டு, மாணவர்களை சிறந்த திறன் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சியில், பயிலுனர்கள் ஐந்து குழுக்களாக செயற்பட்டு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர்.

தொழில் முயற்சியாண்மை, மரம் நடுதல், தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற சமூக செயல் திட்டங்களை எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதியில்,

தொழில் வழிகாட்டல் அலகின் ஆலோசனையில் வெள;வேறு தளங்களில் அமுலாக்கம் செய்ய உள்ளனர்.

இவ்வாறு, இந்தப் பயிற்சியின் மூலம், சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வினையூக்கியாக பயிலுனர்கள் செயற்பட்டு, சிறந்த தலைவர்களாகவும், சமூகத்திற்குப் பயனுள்ள

நற்பிரஜைகளாகவும் தங்களை வெளிப்படுத்த உள்ளனர்.

பயிற்சி பட்டறையின் இறுதி நாளில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பல்கலைக்கழக உபவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான அற்புதராஜாவின் கரங்களால் அனைத்து பயிலுனர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பின்னூட்டலின்போது, முவின மாணவர்களும் உட்படுத்தப்பட்டு ஆங்கில மொழியில் இப்பயிற்சி வழங்கப்பட்டதை பயிலுனர்கள் பெரிதும் வரவேற்று பாராட்டினர்.

# அரச அலுவலர்களுக்கு ஆரோக்கிய உடற்பயிற்சி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொற்றா நோய் மற்றும் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு சகல உத்தியோகத்தர்களினதும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கிணங்க, பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் அவர்களால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட தொற்றாநோய் தொடர்பானவிழிப்புணர்வு கருத்தரங்கும் உடற்பயிற்சியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், தொற்றா நோய் தொடர்பாகவும் உடற்பயிற்சியின் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் விளையாட்டு மற்றும்







உடற்பயிற்சி விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஏ.ஏ.எம்.புஹைம் உடற் பயிற்சி அளித்து அது தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு செவிமடுக்கும் மாற்றம் எப்போது?

**நீதிமன்றத்தின் உள்ளேயே நுழைந்து சந்தேகநபர் ஒருவரை நீதிவானின் முன்னிலையில் படுகொலை செய்தமை மற்றும் தொடர்ந்து இடம்பெற்றுவரும் துப்பாக்கிச் சூடுகளால் சிறுவர்கள், பெண்கள் உட்படப் பலரும் படுகொலை செய்யப்பட்டுகின்றமை ஆகியவற்றைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க் கட்சிகள் கருத்துத் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத்திலும் அந்தக் குரல் ஓங்கி ஒலிக்கின்றது.**

**இந்தச்சம்பவங்கள்சட்டம்ஒழுங்குகாவலர்களின்பலவீனத்தின் வெளிப்பாடுதான் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். சட்டம் ஒழுங்கு காவலில் ஏற்படும் வீழ்ச்சி என்பது தேசிய பாதுகாப்பில்விழுந்துள்ளஓட்டைதான்என்பதும்அனைவருக்கும் தெரிந்தவிடயம்தான். இந்தப் பலவீனத்திற்கும் ஓட்டைக்கும் இன்றைய ஆளும்தரப்புக் காரணமாக இல்லாதிருக்கலாம், அது கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களால் முன்னெடுக்கப்பட்ட முறைகேடான ஊழல் மிகுந்த ஆட்சியின் விளைவானதாகவும் இருக்கலாம். ஆனால், அதன் பாதிப்பு இன்று உணரப்படுகின்றது, வெளிப்படுகின்றது, தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதே யதார்த்தம்.**

**அதைச் சுட்டிக்காட்டுவதை எப்படி சதி, ஆளும் தரப்பைக் கவிழ்க்கும் முயற்சி என்றெல்லாம் விவரணப்படுத்த முடியும்? எதிர்க் கட்சிகளின் விமர்சனங்களுக்கு, கவலைகளுக்கு இப்படித்தான்பதிலளித்திருக்கிறார்இலங்கையின்அரசதலைவர். பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்தபடி, ஒரு மாற்றத்திற்காக வாயிலைத் திறப்பேன் என்று வாக்குறுதியளித்து அதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட பொறுப்பிலிருந்தபடி இப்படிப் பொறுப்பற்ற தனமாக எதிர்க் கட்சிகளின் கருத்துக்களை காதிலேயே வாங்கிக்கொள்ளமாட்டேன் என்பது எந்தளவிற்குப் பொறுப்புவாய்ந்த செயல்?**

**''பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் எதிர்க்கட்சியின் கனவு தற்போது முற்றுப்பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் நெருக்கடியிருப்பதாகக் காண்பித்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும்முயற்சியில்எதிர்கட்சிதற்போதுஇருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது'' என்று அரசுத் தலைவர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.**

**''இம்மாதத்தில் நடந்த ஐந்து குற்றச் செயல்களை விசாரணை செய்யும்போது ஐந்து குழுக்களினால் அந்த குற்றச் செயல்கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது. விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமது பக்கம் விசாரணைகள் வருவதை குற்றச் செயல்களை செய்வோர் அறிந்துகொள்கின்றனர். அவ்வாறு பல குற்றக் குழுக்கள் ஒரே சமயத்தில் இயங்குவது சூழ்ச்சியாக இருக்குமா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த சூழ்ச்சியை அறிந்துகொண்டு அதனை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் சூழ்ச்சிகளால் ஆட்சி மாற்றம் செய்த காலம் முடிந்துவிட்டது. அரச நிறுவனங்கள் மற்றும் அரசியல் அதிகார தரப்பைக் குற்ற குழுக்கள் அற்றதாக்கும் சமூகத்தை கட்டியெழுப்ப உள்ளோம்'' என்று அவர் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்திற்குள் ஆளும்தரப்பை விமர்சிப்பதையும் கண்டிப்பதையும் கருத்துச் சொல்வதையும் சதி என்றும், சூழ்ச்சி என்றும், அட்சிக் கவிழ்ப்பு முயற்சி என்றும் தூக்கி எறியும் அரசியல் போக்குத்தான்கடந்த75ஆண்டகளாவும்இலங்கையில்இருந்தது. எதிர்க் கட்சிகளின் காத்திரமான எந்தவொரு கருத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டதன் மூலமே ஆளும்தரப்புக்கள் இலங்கையை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் முறிந்துபோன ஓர் அரசாக மாற்றி வைத்துள்ளனர். மக்களுக்கு மாற்றத்தைப் பரிசளிப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த இன்றைய ஆளும்தரப்பும் அதே போக்கில், எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு செவிமடுக்காமல் சதி, சூழ்ச்சி, ஆட்சிக் கவிழ்ப்பு என்று விமர்சனங்களை மடைமாற்றி விடயங்களைத் திசை திருப்ப முயல்வது ஏமாற்றத்தைத் தருகிறது. இந்த நிலை ஒருபோதும் மாறாதா?**





# மின்னுவதெல்லாம் பொன்னல்ல

**அனந்தபத்மநாபன்**

இன்று நம் குழந்தைகள் அதிக நேரம் எதில் செலவிடுகிறார்கள்? நிச்சயமாக, நம் கைகளில் இருக்கும் கைப்பேசிகளில்தான்!

தொழில்நுட்பம் முக்கியம். ஆனால், அந்த மின்னும் திரைகளுக்குப் பின்னால் இருக்கும் ஆபத்தை நாம் கவனிக்கிறோமா? குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு திரையில் செலவிடும் நேரம் எப்படி கெடுதல் செய்யும் என்பதைப் பற்றி யோசித்திருக்கிறோமா? பெற்றோர்களாகிய நாம், இந்த எண்ம உலகினுள் குழந்தைகள் மூழ்கிப்போவதால் என்ன நடக்கும் என்பதை உண்மையில் தெரிந்துகொண்டிருக்கிறோமா?

குழந்தைகளின் உலகம் மகிழ்ச்சியான கனவுகளால் நிறைந்திருக்கவேண்டும்.



ஆனால், இன்று பல குழந்தைகளின் உலகம் எண்மத் திரைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சின்ன குழந்தைகள் முதல் பெரிய குழந்தைகள்வரை கைப்பேசிகளுக்குஅடிமையாகிவிட்டார்கள். இந்த மின்னும் திரைகள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்குமா? பெற்றோர்களே, கொஞ்சம் கவனியுங்கள்! குழந்தைகளின் எதிர்காலம் உங்கள் கையில்.

திரையைப் பார்ப்பதில் அதிக நேரம் செலவிடுவது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பல வழிகளில் பாதிக்கிறது. பல பிரச்சினைகளை உருவாக்குகின்றது. குழந்தைகளின் உடல், மன மற்றும் சமூக வாழ்க்கையைப் பாதிக்கிறது. ஒரு சமீபத்திய ஆய்வு இதை உறுதி செய்துள்ளது. 2 வயது முதல் 8 வயது வரையில் உள்ள 6 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளைப் பல ஆண்டுகளாகக் கண்காணித்ததில், அதிக நேரம் திரையைப் பார்க்கும் குழந்தைகளுக்குப் பலவிதமான பிரச்சினைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடல்நலப் பிரச்னைகள் முதல் மனநலப் பிரச்னைகள் வரை, படிப்பில் பின் தங்குவது முதல் மற்றவர்களுடன் பழகுவதில் சிரமம் ஏற்படுவது வரை, திரையில் செலவழிக்கும் அதிக நேரம் நமது குழந்தைகளின் வாழ்க்கையைக் கெடுக்கிறது.

குழந்தைகள் அதிக நேரம் திரையில் மூழ்கியிருப்பது அவர்களின் உடல் பருமனுக்கு வழிவகுக்கும். கண் கோளாறுகள், தூக்கமின்மை போன்ற உடல்நலப் பிரச்சினைகளும் ஏற்படும்.

மன அழுத்தம், பதற்றம், கவனக்குறைவு போன்ற மனநலப் பிரச்னைகள் திரையை அதிக நேரம் பார்ப்பதுடன் தொடர்புடையவையாக உள்ளன.

மற்றவர்களுடன் பழகுவதில் சிரமம், உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமை போன்ற சமூகத் திறன்கள் குறைபாடு திரையை அதிக நேரம் பார்க்கும் குழந்தைகளுக்கு ஏற்படும்.

கற்றலில் ஆர்வம் குறைதல், குறைந்த மதிப்பெண்கள் போன்றவை திரையை அதிக நேரம் பார்ப்பதால் ஏற்படும். இந்த ஆய்வில், அதிக நேரம் திரையைப் பார்க்கும் குழந்தைகளின் எழுதும் திறன் மற்றும் தகவல் தொடர்புத் திறன்கள் குறைவாக இருப்பது தெரியவந்தது. கல்வியில் பின்னடைவு ஏற்படுகிறது.

இந்த ஆபத்தான விஷயங்களை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

## மின்னுவதெல்லாம் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நினைத்து, பெற்றோர்கள் உடனே ஏதாவது செய்ய வேண்டும். திரையை அதிக நேரம் குழந்தைகள் பார்ப்பது குறித்து நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும் என்று இந்த ஆய்வு முடிவுகள் நம்மை எச்சரிக்கின்றன!

### பெற்றோர் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான, சந்தோஷமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக, பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்:

திரையைப் பார்க்கும் நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள். குழந்தைகள் எவ்வளவு நேரம் திரையைப் பார்க்க வேண்டும் என்பதை முடிவு செய்து, அதை கண்டிபாகப் பின்பற்றுங்கள். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கும் குறைவாக திரையைப் பார்க்கும் நேரம் இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

### மாற்று வழிகளை ஊக்குவியுங்கள்.

விளையாடுதல், படித்தல், நண்பர்களுடன் பழகுதல் போன்ற நல்ல விஷயங்களில் ஈடுபட குழந்தைகளை ஊக்குவியுங்கள். அவர்களுக்கு புத்தகங்கள் வாங்கி கொடுங்கள், விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லுங்கள், நண்பர்களுடன் விளையாடச் சொல்லுங்கள்.

குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுங்கள். குழந்தைகளுடன் பேசுங்கள்; விளையாடுங்கள்; புத்தகங்கள் படியுங்கள். அவர்களுடன் நேரம் செலவிடுவது அவர்களின் மன மற்றும் சமூக வளர்ச்சிக்கு ரொம்ப முக்கியம்.

அதிக நேரம் திரையை குழந்தைகள் பார்ப்பதால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இது பற்றி தெரியப்படுத்தி சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

இந்த வழிகளைப் பின்பற்றுவதன் மூலம், நமது குழந்தைகளுக்கு நல்ல எதிர்கால உலகை உருவாக்க முடியும். மேலும் அவர்கள் நன்றாக வளர உதவ முடியும். குழந்தைகளின் எதிர்காலம் எண்மத் திரையில் இல்லை. அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு மின்னும் திரையும் ஒரு வாய்ப்பை இழக்கச் செய்கிறது. ஒவ்வொரு கதை சொல்லலும், ஒவ்வொரு விளையாட்டும், ஒவ்வோர் உரையாடலும் சிறந்த ஓர் எதிர்காலத்தை உருவாக்குகிறது. நம் குழந்தைகளின் எதிர்காலம் நம் கையில்.

## ஹெரோயின், 2 வாள்களுடன் மூவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு தனியார் விடுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் அக்கரைப்பற்று பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் இரண்டு வாளுடன் மூன்று சந்தேக நபர்களை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஆண் சந்தேக நபர் ஒருவரையும், யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண் சந்தேக நபர் ஒருவரையும், அட்டாளைச் சேனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் சந்தேக நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 30 கிராம் 70 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் இரண்டு வாள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பொலிஸாரால் 30 கிராம் 70 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் இரண்டு வாளுடன் கைதான மூவரையும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இதன் போது, அக்கரைப்பற்று நீதிவான் பெண் சந்தேக நபரை விளக்கமறியலிலும், இரண்டு ஆண் சந்தேக நபர்களை 03 நாள்களுக்கு தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், குறித்த கைது நடவடிக்கையானது அக்கரைப்பற்று பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டுதலில் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகிகளை பொறுப்புகளை ஒப்படைக்குமாறு பணிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பள்ளிவாசலின் சகல ஆவணங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைப்பது தொடர்பாக என தலைப்பிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சாய்ந்தமருதுஜும்ஆபள்ளிவாசல்முன்னாள் நம்பிக்கையாளர்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்த கடிதத்தில் மேற்படி விடயம் தொடர்பாக,வக்புசபையின்று8ஃ10215/2025 எனும் தீர்மானத்தின் பிரகாரம் கல்முனை-சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள ஜும்ஆ பள்ளிவாசலின் 42 பேர்களுக்கு விசேட நம்பிக்கையாளர் நியமனம் 18.02.2025 தொடக்கம் 17.02.2026 வரை வழங்கப்பட்டுள்ளது. இவ் விசேட நியமனம் தொடர்பாக சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்களிடமுள்ள பள்ளிவாசல் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை புதிய விசேட நம்பிக்கையாளர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். என தெரிவித்து வக்பு சபையின் றுடீ/10215/2025 எனும்தீர்மானத்தின்பிரதி இணைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள அந்த கடிதத்தின் பிரதி சாய்ந்தமருது பிரதேச செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த பள்ளிவாசலின் பெயர் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் என சட்டவிரோதமாக அழைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர் கௌரவிப்பு

(முகம்மட் இம்றான்)



கிண்ணியா மகளிர் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரிட்சையில் கடந்த ஆண்டு (2024) சித்தி அடைந்த மாணவிகள் கௌரவிப்பு நிகழ்வு வியாழக்கிழமை அதிபர் திருமதி என். நஸீரா நஜாத் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிண்ணியா வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.சி. நஸார் கௌரவ விருந்திராக கலாநிதி ஏ. எஸ். அஸ்மி கலந்து சிறப்பித்தனர்.

கிண்ணியா கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஜே.எம். றியாஸ் ஆரம்பக்கல்வி இணைப்பாளர் எம்.எஸ்.எம். அனிபா ஆரம்பக்கல்வி வளவாளர் ஏ.எல்.எம்.நஜாத் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில்புலமைப்பரிசில்பரீட்சையில்வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற இருபத்து ஐந்து மாணவிகளுக்கு தங்க பதக்கங்கள் பாதணி வழங்கி பாராட்டப்பட்டனர். இதில் விசேட தேவையுடைய மாணவியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்க வேண்டிய விடயமாகும்.

புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த (எழுபது புள்ளிக்கு மேல் பெற்ற)மாணவிகளுக்கும்கற்றல்உபகரணங்கள் வழங்கி



கௌரவிக்கப்பட்டனர்.

சித்தி பெற்ற மாணவிகளின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தரம் ஒன்று தொடர்க்ம் ஐந்து வரை கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவித்தனர்.

இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் தரம் ஐந்து பெற்றோர்களும்அயராது பாடுபட்டனர்.

# சிவராத்திரியன்று சாவகச்சேரியில் புதிய அசாத்திய சாதனை நிகழ்வு

(சுபேசன்)



சிவராத்திரி தினத்தைமுன்னிட்டு புஜுன்கிழமை பிற்பகல் தென்மராட்சியைச் சேர்ந்த உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் புதிதாக இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

1500கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை தனது உடலில் கட்டி கைதடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சாவகச்சேரி பஸ் தரிப்பிடம்வரையான 7கிலோமீற்றர்தூரம் இழுத்ததுடன்-

3000கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை தனது காதுகளில் கட்டி 50 மீற்றர் தூரம் இழுத்தும் புதிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.



மேற்படி சாதனை நிகழ்வில் விருந்தினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப்புலவர் சி. கா.கமலநாதன் , மீசாலை விக்கினேஸ்வரமகாவித்தியாலய பிரதி அதிபர் கலைஞானி குமரநாதன் மற்றும் தென்மராட்சி கலாசார பேரவையின் செயலாளர் சசிகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருதனர்.

60வயதான உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னரும் உலக சாதனைகளை நிகழ்த்தி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில்இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஸஹர் உணவு விநியோகம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும், கல்முனையில் தங்கியுள்ள வெளியூர் பயணிகளுக்கும் ஸஹர் உணவு இலவசமாக ஏற்பாடு செய்து தரப்படும் என கல்முனையன்ஸ் போரம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஸஹர் உணவு தேவைப்படுபவர்கள் 0777849423 எனும் தொலைபேசி இலக்கத்தை மாலை5.00-7.00 மணிக்குள் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறும், ஸஹர் நேரத்தில் உங்கள் காலடிக்கே நேரில் வந்து ஸஹர் உணவு வழங்கப்படும், என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களும், பல்வேறு தேவைகளுக்காக வெளியூர்களில் இருந்து கல்முனைக்கு வருகை தருபவர்களும் ரமழான் மாதத்தில் ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலையை கருத்தில் கொண்டு கல்முனையன்ஸ் போரம் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்து

காலைக்கதிர் Kalaikkathir

## வடக்கு கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் உதாரணத்திற்கு முல்லைத்தீவு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இரண்டு குடிமகனுக்கு ஒரு படையினர் என்ற ரீதியில் இருக்கின்றனர்.

இராணுவத்தில் 22 படைப் பிரிவுகள் உள்ள நிலையில் அவற்றில் 16 பிரிவுகள் வடக்கு, கிழக்கிலேயே நிலைகொண்டுள்ளன. குறிப்பாக சகல பாதுகாப்பு பிரிவுகளையும் அங்கேயே குவித்துள்ளீர்கள். இதற்கு ஆளும்தரப்பின் பதில் என்ன என்று கேட்கின்றேன். இதன் மூலம் நீங்கள் வழங்கும் செய்தியென்ன? இது மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடு அல்லவா? நாங்கள்தான் உங்களுக்கு எதிரி என்ற செய்தியையா கூற வருகின்றீர்கள்?

முன்னைய ஆளும்தரப்பைப் போன்றே இந்த ஆளும்தரப்பின் கொள்கையும் உள்ளது. இந்த வரவு, செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு மட்டுமேபோதும். இந்த ஆளும்தரப்பு இதனை மாற்றவேண்டும் என்றுநினைத்தால் அதை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறான பிரச்சினைகளை நாங்கள் ஆலோசனைகுழுமற்றும்நாடாளுமன்றத்தில் பேசினாலும் எவ்வித மாற்றங்களும் இடம்பெறுவதில்லை. மாற்றங்கள் செய்யாது இனவாதம் அழிக்கப்படும் என்று கூற முடியாது. இதனால் இது தொடர்பில் வாக்கெடுப்பை கோரவுள்ளதுடன் இதற்கு எதிராக வாக்களிப்போம் – என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய பதில் தாக்குதலில் கொழும்பு குற்றப்பிரிவில் பணியாற்றிய சார்ஜென்ட் உப்புல் குமார கொல்லப்பட்டமை தொடர்பான நீதிவான் விசாரணையின் இறுதியில் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விசாரணையின் முடிவில், இது ஒரு குற்றம் என்று முடிவுசெய்து, சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்களை உடனடியாகக் கைது செய்ய உத்தரவிட்டார் நீதிவான். 80 பக்க தீர்ப்பை வழங்கிய அவர், இறந்தவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களாலேயே இறந்தார் என்று தீர்ப்பளித்தார்.

முன்னாள் சப்ரகமுவ ஆளுநர் ஏ.ஜே.எம்.முசம்மிலின் மகனுக்குச் சொந்தமான மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள, 'நி50' என்ற ஹோட்டலின் ஹோட்டலில் நடந்த இந்தச் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக ஒரு வருடகால விசாரணையின் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலின் மீது வெள்ளை வேனில் வந்த ஒரு குழு துப்பாக்கிச் சூடு நடத்துவதாக வெலிகம காவல்துறையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்த வான் மீது வெலிகம பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இரகசிய தகவலைத் தொடர்ந்து, இமதுவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் அந்த வெள்ளை வேனைக் கைப்பற்றிய பொலிஸ் அதிகாரிகள், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வெள்ளை வேனில் இருந்த இருவரை ஆம்புலன்ஸ் சேவை மூலம் கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களில் ஒருவர் அங்கு உயிரிழந்தார். அவர் கலேவெலவைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையான 46 வயதான சார்ஜென்ட் உப்புல் குமார என்பது தெரியவந்தது. அவர் கொழும்பு குற்றப்பிரிவில் இணைக்கப்பட்டிருந்தவர். மற்றைய நபர் கொழும்பு குற்றப்பிரிவில் இணைக்கப்பட்டிருந்த ஒரு துணைப் பரிசோதகர் என்பதும் தெரியவந்தது.

'ஹரக கட்டா' மற்றும் 'மிடிகம ருவான்' போதைப்பொருள் வலையமைப்பில் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்காக 'ஆபரேஷன் ஜஸ்டிஸ்' இன் கீழ் கொழும்பு குற்றப்பிரிவு நடத்திய சோதனையின்போது இந்தச் சம்பவம் நடந்ததாகப் பின்னர் தெரியவந்தது. முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் முன்னாள் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேசபந்து தென்னகோன் ஆகியோர் பின்னர், கொல்லப்பட்ட சார்ஜென்ட் உப்புல் குமாரவின் உறவினர்களுக்கு ரூ. 42 இழப்பீடு வழங்கினர் எனவும் தெரியவந்தது.

சம்பவம் தொடர்பாக வெளிவந்த உண்மைகளின் அடிப்படையில், விசாரணை தென் மாகாண காவல் நிலையங்களிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது, ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்த நீதிவான் விசாரணையின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

நீதிவான் இது ஒரு குற்றம் என்று தீர்ப்பளித்தார். குற்றத்தில் ஈடுபட்ட நபர்களைக் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் -முற்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

## கடந்தகால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளும் இதுவரையில் நடக்கவில்லை. அரச புலனாய்வு அதிகாரிகள் இதில் தொடர்புபட்டிருக்கின்றனர் என்று தெளிவாகக் கூறியிருந்தோம்.

அண்மையில் இடம்பெற்ற கணேமுல்லை சஞ்சீவ கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து சாட்சியாளர்கள் பலர், சாட்சிகளை உங்களிடம் கூறி அதனை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினால் எங்களுக்கும் இதுவா நடக்கும் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

2009ஆம் ஆண்டு போரின் பின்னர் மெனிக்பாமில் இருந்த 27 இளைஞர்கள் காத்தான்குடிக்குக் கொண்டுவரப்பட்டு காத்தான்குடியில் கொலை செய்யப்பட்டு கடலில் போடப்பட்டனர் என்று அதைச் செய்த புலனாய்வுப் பிரிவினருடன் இருந்த வாகன சாரதியின் ஒருவர் வழங்கிய சாட்சியம் என்னிடம் வீடியோவாக உள்ளது.

இது தொடர்பில் ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்தகாலங்களில் இடம்பெற்ற சூழ்ச்சிகளை செய்த குழுக்களுக்கு அது பயப்படுகின்றதா? இவற்றை மூடி மறைக்க ஆளும்தரப்பு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்ற-து – என்றார்.

## மீளாய்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத்திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் ஆதரவுடன்தான் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், பெருந்தோட்ட மக்களும் அரசாங்கத்துக்கு விசேட ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே அனைத்து இனமக்களையும் ஒன்றிணைத்தே செயற்படுகிறோம். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அனைத்து சிறப்புரிமைகளையும் நீக்கிக் கொண்டு இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம்.

பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் முப்படைகள் உள்ளடங்களாக 25 நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஆகவே இராணுவத்துக்கு மாத்திரம் அதிக நிதி ஒதுக்கப்படவில்லை.

தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், மக்களின் பொதுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் இராணுவத்தையே அழைக்கிறோம். ஆகவே முப்படையின் சேவையை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம் மற்றும் இராணுவம் வசமுள்ள காணிகள் குறித்து அப்பிரதேசங்களின் பிரதிநிதிகள் பல விடயங்களை முன்வைத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனை குழுவிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும். அத்துடன் அத்தியாவசியமான இராணுவ முகாம்களை தவிர்த்து ஏனையவற்றை முறையான திட்டங்களுடன் அகற்றுவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த பலாலி மற்றும் அச்சுவேலி வீதிகள் திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பலாலி விமான நிலைய அபிவிருத்தியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## இளைஞர்களுக்குழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிகளைச் சந்திக்கும் தேசிய இனமாக தமிழினம் இன்றும் உள்ளது. நாட்டில் 317,000 படைகள் வரை இருப்பதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. மக்கள் தொகை 2 கோடியே 21 இலட்சத்து 81,000 பேர். இதன் அடிப்படையில் 14 பேருக்கு ஒரு படையினர் என்ற வகையில் உள்ளது. இது வடக்கு மற்றும் கிழக்கில் 6 பேருக்கு ஒரு படை வீரர் என்ற வகையில் உள்ளது. இதில் நாட்டில் உள்ள படைகளில் நான்கில் மூன்று பங்கு படையினர் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் இராணுவக் கெடுபிடிக்குள், திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைதான் உள்ளது.

போரில்லா நாட்டில் ஏன் இவ்வளவு படையினர்? இவர்களுக்கான சம்பளத்திற்காக பெருமளவு பணம் ஒதுக்கப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கில் படையினரை குவித்து நீங்கள் திறந்த வெளிச் சிறைக்குள் தமிழர்களை அடைத்து வைத்துள்ள நிலையில், படையினர் இங்கு தோட்டங்கள் செய்கின்றனர். பலாலி படை முகாமை சூழவுள்ள பல் இடங்களில் படையினர் தோட்டங்கள் செய்கின்றனர். இவர்களின் உற்பத்திகள் யாழ்ப்பாணத்து சந்தைகளில் விற்பனைக்கு வருகின்றன.

அதுமட்டுமல்ல இங்கு படையினர் சலூன்களும் நடத்துகின்றனர். உலகில் சகல நாடுகளும் படையினரை வைத்துள்ளன. அங்கு படையினருக்கான சிகை அலங்காரத்துக்காக சலூன்கள் வைத்திருப்பார்களே தவிர மக்களிடம் பணம் அறவிட்டு படையினரைக்கொண்டு சலூன்கள் நடத்தும் ஒரே நாடு இலங்கைதான். அதுமட்டுமல்ல உணவகங்களையும் நடத்துகின்றனர்.

நான் அண்மையில் வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சென்றேன். அங்கு முகாமிட்டுள்ள இராணுவத்தினர் உணவகம் ஒன்றையும் நடத்துகின்றனர். அங்கு வைத்து இராணுவத்தினரால் இளைஞர்களுக்கு போதைவஸ்துக்களும் வழங்கப்படுகின்றன. சில இளைஞர்கள் அந்த இராணுவ முகாமில் உள்ளாடைகளுடன் இருந்ததைநான் என் கண்களினால் கண்டேன். இராணுவ முகாமில் இராணுவம் உணவகம் நடத்தி தமிழ் இளைஞர்களை இவ்வாறு தவறான வழிக்கு கொண்டு செல்வது எவ்வளவு மோசமான காரியம். இந்த நாட்டில் ஒரு இனம் திட்டமிட்டு ஏதோவொரு வகையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றும்போது, நாங்கள் உள்நாட்டு பொறிமுறையை பின்பற்றி தீர்வைக் காண்கின்றோம் எனக் கூறினார். இது கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இந்த நாட்டில் மாறி மாறி வருகின்ற ஆளும்தரப்புக்கள் சொல்லுகின்ற விடயம் .

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அப்போதிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் நாங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு தீர்வை எட்டுகின்றோம் எனக்கூறினார் . நீங்கள் அப்போது இதனை ஏற்க மாட்டோம் என்றீர்கள். இப்போது உள்ளக பொறிமுறையில் தீர்வு என்கின்றீர்கள். இந்த நாட்டில் தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைக்காமல் உள்ளது நீதி தடுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சுக்காக 2023ஆம் ஆண்டு 375 பில்லியன் ஒதுக்கப்பட்டது. 2024ஆம் ஆண்டு 425 பில்லியன் ஒதுக்கப்பட்டது. தற்போது 2025 ஆம் ஆண்டுக்கு 437 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு படிப்படியாகக் கூடிக்கொண்டே செல்கின்றது.

போர் இல்லாத நாட்டில் படைகளுக்கு ஏன் இவ்வளவு நிதி? சமூக அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி ஒவ்வொரு ஆண்டும் குறைந்து செல்கையில் படையினருக்கான நிதி அதிகரித்து செல்கின்றது. நாட்டில் புரையோடிப்போயுள்ள பிரச்சினையை தீர்க்காமல் படையினருக்கு அதிக நிதிகளை ஒதுக்கிக்கொண்டிருந்தால் இந்த நாட்டின் சரிந்த பொருளாதாரத்தை எவ்வாறு நிமிர்த்தப்போகின்றீர்கள்? மூலதனத்திற்கான ஒதுக்கீடு மிக மிகக் குறைவு. இந்த நிலைமை மாற வேண்டுமானால் முதலில் உங்களின் மன நிலை மாறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 13 கிராம அலுவலகர் பிரிவுகளில் கிட்டத்தட்ட 2,700 ஏக்கர் காணிகள் இப்போதும் படையினர் வசம் உள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற சொல்லுக்குள் அடக்கப்பட்டு அந்த இடங்களில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. மக்கள் இப்போது அகதிகளாக இருக்கின்றார்கள். இந்த மக்களின் காணிகளை ஏன் இன்னும் விட முடியவில்லை? பலாலி விமான நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்ட ஈடுகள் இன்னும் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மேலும் காணிகளை சுவீகரிக்கப்போவதாக செய்திகள் வெளிவருகின்றன.

ஒன்றைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். ஒருபகுதி மக்கள் கண்ணீரோடு வாழ்கின்றார்கள். அந்த மக்களுக்கு நீதி வழங்காது தொடர்ந்தும் படைகளுக்கு அதிக நிதிகளை ஒதுக்குவதென்பது நீதியாக அமையாது. கிளிநொச்சி நகரப்பகுதியில் 39 வீத நிலப்பகுதி தற்போதும் இராணுவ வசம் உள்ளது. இலங்கையில் எங்கேயாவது மாவட்ட அரச செயலகத்திற்குள் இராணுவ முகாம் உள்ளதா? கிளிநொச்சி மாவட்ட செயகத்திற்குள் இருக்கின்ற 2 ஏக்கர் காணியை இராணுவம் பலாத்காரமாக பறித்தெடுத்து இராணுவ முகாம் அமைத்துள்ளது. நகரப் பகுதியில் இராணுவம் குடியிருக்கின்றது. மக்களுக்கான காணிகள் இன்னும் வழங்கப்படவில்லை. அரச காணிகள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே இவ்வாறான படை ஆக்கிரமிப்புக்களிலிருந்து மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறில்லாது இந்த நிலை தொடருமானால் அது நாட்டை மிகவும் ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்லும்.

மக்கள் தமது ஜனநாயக உரிமையைக்கூட பயன்படுத்தமுடியாதவகையில் பாதுகாப்பு கிடுக்கிப் பிடிக்குள் வைக்கப்பட்டுளார்கள். போராட்டங்களில் ஈடுபடுவோர் விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்றனர் என்றார்.

## ரமழான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்கள பிரதிநிதி மற்றும் உலமாக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டின் எப்பிரதேசங்களிலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைக்கவில்லை. எனவே ஷஹ்பான் மாதத்தை 30ஆகப் பூரணப்படுத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை புனித நோன்பை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## ரவிகரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அதிகரித்துள்ள சட்டவிரோத போதைப்பொருள்ஊடுருவல்களைகட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினை வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசானது கிளீன் சிறீலங்கா என்ற திட்டத்தை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தும் எண்ணத்தை,செயலைநாமும்முற்றுமுழுதாக வரவேற்கின்றோம்.

இந்த நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது போதைப்பொருள் பாவனை தலைவிரித்து ஆடுகின்றது. அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையாலும், போதைப்பொருள் ஊடுருவல்களாலும் நாடு முழுவதும் தள்ளாடுகின்றது. எங்களுடைய வடக்குகிழக்கில் 2009ஆம் ஆண்டுக்கு முன்பு இவ்வாறான நிலைமைகள் இருந்ததில்லை. அதுவும் வடக்கிலே மிகக் கட்டுப்பாடாக இருந்த போதைப்பொருள் பாவனைகள், தற்போது மிகவும் அதிகமாகி கிளீன் சிறிலங்கா என்ற செயற்பாட்டுக்கு எதிரான வகையில் உள்ளது.

நான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவன். வன்னி தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன். வன்னியில் மிக மோசமாக, கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் இன்னும் பல பெயர்களில் சட்டவிரோத போதைப்பொருட்கள் தாராளமாக காணப்படுகிறது.

முல்லைத்தீவில் படையினர் மிக அதிகமாக உள்ளதாக பல புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனையும் அளவுக்கதிகமாக அந்தப் பகுதிகளில் உலா வருகின்றன. ஏன்? இதனை பொதுமக்கள் பாதுகாப்பினையும்,நாட்டைத்தூய்மையாக்கும் பணியிலும் ஈடுபடும் பாதுகாப்புத் தரப்பினால் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது.

குறிப்பாக கசிப்பு என்ற சட்டவிரோத போதைப்பொருள்மிகஅதிகமாகபாவனையில் உள்ளதாகவும், கசிப்பை உற்பத்தி செய்யும் சட்டவிரோத உற்பத்தியாளர்கள் பல்வேறு நவீன வழிகளை மேற்கொண்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கசிப்பு உற்பத்தியாளர்களின் வீடுகளில் (சிலர்) குடிநீர்க்குழாய் திறக்கும்போது கசிப்பு வருவதாக மக்கள் எம்மிடம் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறான சம்பவம் ஓர் இடத்தில் இடம்பெற்று பிடிபட்டுள்ளது. இவ்வாறான சூட்சுமமான முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வீடுகளுக்குள் சுரங்கம் தோண்டி அதற்குள்ளும் கசிப்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நான் கிராமங்கள் தோறும் மக்கள் குறைகேள்சந்திப்புகளைநடத்திவருகின்றேன். அந்தவகையில்கடந்த மாதம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்வெள்ளப்பள்ளம்என்றகிராமத்தில் இடம்பெற்றஎனதுமக்கள்குறைகேள்சந்திப்பில் பெருமளவு மக்கள் கூடியிருந்து என்னிடம் கைகூப்பிவேண்டினார்கள், சிலர் அழுதார்கள், தங்களுடைய குடும்பங்கள் சீரழிவதாகவும் இதனை கட்டுப்படுத்துங்கள், ஜனாதிபதியிடம் சொல்லுங்கள், நாடாளுமன்றத்தில் சொல்லுங்கள் எனத் தெரிவித்தனர்.

தங்களுடைய கிராமத்தில் கசிப்பு, கஞ்சா உள்ளிட்டசட்டவிரோதபோதைப்பொருட்களால் இதுவரை 13 பேர் இறந்துவிட்டதாகவும், சிலர் இறக்கும்நிலையில் இருப்பதாவும் மக்களால் என்னிடம் முறையிடப்பட்டது. இதேபோல பாரதிபுரம், வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில் பகுதிகளில் இதுவரை 43பேர் மாண்டுவிட்டதாகவும், இன்னும் இறக்கும் நிலையில் சிலர் இருப்பதாகவும் தெரிவித்து, தங்களுடையகுடும்பங்களைக்காப்பாற்றும்படி வேண்டுகின்றார்கள். இப்படி நிலைமைகள் இன்னும் பல கிராமங்களில் உள்ளன.

கசிப்பு உற்பத்தி இடம்பெறும் சில இடங்களை தாங்களே காட்டுவதாக மக்கள் சொல்கின்றார்கள். தற்போதைய பொருளாதார வீழ்ச்சியால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்திசெல்வதில் பலத்த இடர்பாடுகள் இருக்கும்போது இந்தப் போதைப்பொருள் பிரச்சனை மிகவும் மோசமாகவுள்ளது.

இதுதொடர்பில்இன்னுமொருசம்பவத்தை இங்கு தெரிவிக்கலாமென நினைக்கின்றேன். ஒரு அம்மாவும் அவருடைய மகளும் எனது அலுவலகத்திற்கு வருகைதந்து அழுதார்கள். தந்தையின்கசிப்புபாவனையால் வீட்டில் ஒவ்வொரு நாளும் பிரச்சனை எனவும், வீட்டிலுள்ள வயது வந்த மூன்று பிள்ளைகளும்,தற்கொலைசெய்யப்போவதாக சொல்கின்றார்கள் என அழுதார்கள். நிலமைகளைச் சற்று எண்ணிப்பாருங்கள்.

பொலிஸார் என்ன பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள்? ஏன் இவர்களால் போதைப்பொருள் உற்பத்திகளையும், ஊடுருவல்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை?

இந்நிலையில் பொலிசார் சிலபேர் இதற்கு உடைந்தையாகச் செயற்படுகின்றனர் எனவும் மக்கள் முறையிடுகின்றார்கள். தாங்கள் பொலிசாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ளும்போது, தங்களை கசிப்பு உற்பத்தியாளர்களிடம் பொலிசார் காட்டிக்கொடுக்கின்றனர் என்று மக்கள் எம்மிடம் முறையிடுகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கிளீன் சிறிலங்கா என நாடுமுழுவதும் இல்லாவிட்டாலும், அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்த இடங்கள் கிளீனாக இருந்தது. போதைப்பொருள் பாவனை இல்லாத ஒருபகுதி இருந்தது. இதண்ண யாரும் மறுக்கமுடியாது.

மிகஅதிகமாகபொலிஸாரும்,படையினரும் இருக்கும்இப்போது இதனைக்கட்டுப்படுத்தாது கசிப்புஉற்பத்திகட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. போதைப்பொருட்களின் ஊடுருவல்களால் பலகுடும்பங்கள்பசிபட்டினியுடன்காணப்படும் அவலம், பலதிருட்டுசம்பவங்கள்இடம்பெறும் நிலமை, இதனைவிட ஒருதொகுதி இளைஞர்குழாம் போதைக்கு அடிமையாகி மரணிக்கும் நிலைமைகள், அதிகரிக்கும் சமூகச்சீர்கேடுகள் என துன்பியலான ஒரு நிலைமைக்குள் பொதுமக்கள்பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் வன்னிப் பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு மரக்கடத்தல்களும் இம்பெறுகின்றன. சில இடங்களில் மணல்கொள்ளை, கிரவல் அகழ்வு இவ்வாறான சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் போதைக்கு அடிமையானவர்களே அதிகம் உள்ளதாக அறியக்கூடியதாகவுள்ளது.

அதேவேளை மற்றுமொரு சம்பவம், அண்மையில் முல்லைத்தீவு மல்லாவிப்பகுதியில் அமைந்துள்ள யோகபுரம் பாடசாலைக்குள் சிவில் உடையில் மது போதையில் நுழைந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாடசாலை மாணவிகளுடன் முறையற்றவிதத்தில் நடந்துகொண்டுள்ளார். இந்நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததற்கமைய அவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 5ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இத்தகைய செயலுக்கு மிகவும்கடுமையானதண்டனைவழங்கப்பட வேண்டும். இந்தவிடயத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்து சம்பவ வீடியோ ஆதாரமும் வழங்கியுள்ளோம்.

ஒரு காலத்தில் எமது இடத்தில் பெண்கள் இரவுநேரத்தில் கூடத் தனியாக செல்லக்கூடிய சுதந்திரம் இருந்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை. குப்பைகளை மட்டும் கூட்டி கிளீன் சிறீலங்கா ஆக்க முடியாது. சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும். சட்டவிரோத மதுஉற்பத்திகள், சட்டவிரோதமரக்கடத்தல்கள், சட்டவிரோத மணல், கிரவல் கொள்ளைகள், சட்டவிரோதகால்நடைக்களவுகள், கடத்தல்கள், இப்படி ஏராளமாக இருக்கும் குற்றச்செயல்கள் களையப்படவேண்டும். அப்போதுதான் மக்கள் மனதில் இடம்பிடிக்கமுடியும். நாடும் கிளீன் சிறீலங்காஆகும்.

சட்டவிரோத போதைப் பொருள்குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிசார் மற்றும். பாதுகாப்புத்தரப்பினராக இருந்தால் பணியிலிருந்துநீக்கிபுனர்வாழ்வுஅளியுங்கள். அடுதேபோல் சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களையும் கைதுசெய்து புனர்வாழ்வு அளியுங்கள். இவ்வாறு புனர்வாழ்வு அளிப்பதன் மூலமாவே ஒருசீரான, போதையற்ற தூய்மையான, சமூகக்கட்டமைப்பை ஏற்படுத்த முடியும். ஒரு நேர்த்தியானதும், இறுக்கமானதுமான அரசநிர்வாக கட்டமைப்பையும் ஏற்படுத்தமுடியும்.

இதன் மூலமே பொலிசார் மீது மக்கள் வைத்துள்ள தப்பான கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்படும். அவ்வாறாக தங்களின் கிளீன் சிறீலங்கா திட்டத்தை சீராகச் செய்து தூய்மையான அரச கட்டமைப்பையும், தூய்மையானசமூகக்கட்டமைப்புக்களையும் ஏற்படுத்தி, மக்கள்மனங்களில்நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். பொலீசாராடமோ, பாதுகாப்புத் தரப்பினரிடமோ சென்றால் தமக்கு தீர்வுகிடைக்கும் என்ற மனநிலையை மக்களிடம் கொண்டுவாருங்கள்.

இந்தநிலமைகளைசீராக்கிகொண்டுவந்து பாருங்கள். வளமானநாடுஅழகானவாழ்க்கை, நாடுகிளீன்சிறீலங்காஆகிவிடும். பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சரின் கவனத்திற்கு மேற்படி விடயங்களைக் கொண்டுவருகின்றேன் என்றார்.

## வழக்குகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

262,665 வழக்குகளும், சிறுவர் நீதிவான் நீதிமன்றங்களில் 1,260 வழக்குகளுமாக ஒட்டுமொத்தமாக தீர்க்கப்பட வேண்டிய 1,131,818 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வழக்கு விசாரணைகளை நெறிப்படுத்துவதற்கானதிட்டங்கள்ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பில் நீதிபதிகளுக்குப் பயிற்சியளிக்கும் செயற்றிட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இலங்கை நீதிபதிகள் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் நீதி மற்றும்தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதல் தடவையாக அதன் தலைவர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷன நாணயக்கார தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே இந்தத் தகவல்கள் முன்வைக்கப்பட்டன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகளில் காலதாமதம் இருப்பதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் பிரிவில் 70 அரச சட்டத்தரணிகளே இருக்கின்றனர் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மேலும், ஒதுக்கப்பட்ட வழக்குகளைக் கையாள ஒரு அரச சட்டத்தரணிக்குப் பல வருட அனுபவமும் நிபுணத்துவமும் இருக்கவேண்டும் என்றும், காலதாமதத்திற்கு சேவை மூப்பு ஒரு முக்கிய காரணியாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் வகிபாகம் மற்றும் காலதாமதம் தொடர்பில் சில காலங்களாகப் பேசப்பட்டு வருவதாகவும், திணைக்களத்தில் உள்ள சட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது போதுமானதாக இல்லையென நீதி மற்றும் தேசியஒருமைப்பாட்டுஅமைச்சர்(சட்டத்தரணி) ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மேலும், ஏறத்தாழ 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்கள் 6 பேர் இந்த வருடத்திற்குள் வேலையிலிருந்து விலகுகின்றனர் எனவும் குறிப்பிட்ட அவர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகளை எவ்வித இடையூறும் இன்றி முன்னெடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு முன்னெடுக்கும் என்றும் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டு கௌரவ பிரதியமைச்சர் மொஹமட் முனீர் முலாபர், குழுவின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# வவுனியாவிற்கு வருகை தந்த மகளிர் விவகார அமைச்சர்

மகளிர் விவகார அமைச்சர் சரோஜினி போல்ராஜ் வவுனியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததுடன், தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினருடனான சந்திப்பொன்றையும் மேற்கொண்டிருந்தார்.





குறித்த சந்திப்பானது வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது.

இதன்போது, அமைச்சரிடம் வவுனியா மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பெண்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், கோரிக்கை கடிதங்களும் கையளிக்கப் பட்டிருந்தன.



இதேவேளை, பிரதேச பெண்கள் வலையமைப்பினர் ஊடாக அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த சந்திப்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களை சேர்ந்த பெண்கள் என பலரும் கலந்து கொண்டிருத்தனர். 100

# தினகரனின் 92ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

(சுபேசன்)

தினகரன் தேசிய நாளிதழின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தன.

இதன்போது விசேட அதிதிகளாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் பனை அபிவிருத்திச் சபையினுடைய தலைவர் வி.சகாதேவன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.



# யாழ் மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஊராட்சி முற்ற நிகழ்வு

(சுபேசன்)

யாழ். மாவட்ட குடிசார் அமைபுகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் ஊராட்சி முற்றம்(மகளிர் குரல்) என்ற சமூக மட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.



யாழ்மாவட்ட குடிசார் அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவி திருமதி ம.தமிழ்ச்செல்வி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனன்,

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், உதவி மாவட்ட செயலாளர் தர்ஷினி,

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது சமுகத்தில் தீர்க்கப்படப்படாத பிரச்சினைகளாக உள்ள வேலணைப் பிரதேச வைத்தியசாலையின் ஆளணிப் பிரச்சினை,

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், நீதிமன்ற வழக்குப் பதிவின் போதான தாமதமும் - அதனால் பெண்கள் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சனைகளும், நுகர்வோர் பாதுகாப்பு,பொதுச் சுகாதாரம், போக்குவரத்து,விவசாயம் மற்றும் வடிகாலமைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தன.

மேலும்குறித்தநிகழ்வில்பிரதேச செயலாளர்கள்,போக்குவரத்துத் துறை, மின்சார சபை, உள்ளூராட்சி சபை ,விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள்,

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள்மற்றும்யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகளின் சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.



மேற்படி கலந்துரையாடலில் பல ஆக்கப்பூர்வமான தீர்மானங்கள்எடுக்கப்பட்டதுடன் சிலபிரச்சனைகளுக்கானதீர்வுகள் மற்றும் ஆலோசனைகளும் துறை சார்ந்த அதிகாரிகளால் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# 12 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

வீதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய பெண்ணிடம் இருந்து சட்டவிரோத கசிப்பு சம்மாந்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலவக்கரை வீதியில் சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு வியாழக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 12,000 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 57 வயதுடைய சந்தேக நபரையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மேலும் கைதான வீரமுனை பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி சோதனை நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசனையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.றிபாய்டீன் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இது தவிர கடந்த சில தினங்களுக்கு மன்னர் சம்மாந்துறை பொலிஸார் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி போராட்டக்காரர்கள் இவ்வாறு மல்வத்தை பகுதியிலுள்ள இலங்கை இராணுவத்தின் 24 ஆவதுகாலாட்படை பிரிவுதலைமையகத்திற்குச் சென்று இராணுவ அதிகாரிகளிடம் தங்கள் குறைகளை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து உரிய தரப்பினரிடம் தெரிவிக்க நடவடிக்கை எடுப்பதாக இராணுவ அதிகாரிகள் அம்மக்களிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# பள்ளிவாயல்களின் சம்மேளனத்துடன் ஆதம்பாவா எம்.பி. விசேட சந்திப்பு

(ஸாகிர்)

அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவுடன் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த சிநேகபூர்வ சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இரவு சம்மேளன கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சம்மேளன உப தலைவர் அல்ஹாஜ் எம்.சீ.எம்.ஏ. சத்தார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வினை பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க். எம்.எம்.எம். இல்ஹாம் பலாஹி வழி நடத்தினார்.

சம்மேளனம் தொடர்பான பொது அறிமுகம், அதனூடாக முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பாக உப தலைவர் அல்ஹாஜ் எம்.சீ.எம்.ஏ. சத்தார் விளக்கியதுடன், இச் சந்திப்பின் நோக்கம் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

மேற்படி சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

அதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினினால் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய வகையில் விஷேட உரையொன்றும் நிகழ்த்தப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தில் அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினைகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பான விடயங்கள்நாடாளுமன்றஉறுப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டதுடன், ஐயங்களுக்கான தெளிவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மேளன நிர்வாக சபை உறுப்பினர்கள்,

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், கல்வியியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

புதிய அரசமைப்பு தொடர்பாக சம்மேளனத்தால்முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான செயற்பாடுகளின் அடுத்த கட்ட நகர்வாக இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்க அம்சமாகும்.










காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநரின் 2 நூல்கள் வெளியீடு இன்று

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் சமுத்திரா வெளியீட்டக ஏற்பாட்டில், கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர், பேராசிரியர் ' ஜெயந்த லால் ரத்ன சேகரவின் ', ' விஞ்ஞானத்தினதும் மனித மூளையினதும் மர்மங்கள் '' ஏரியின் மத்தியில் போர் ' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இன்று(சனிக்கிழமை) திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில்ஸ்ரீ காலை 09.30மணிக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மு.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் எழுத்தாளர் உமா வரதராஜன் நூலாய்வுரை ஆற்றவுள்ளார். இந் நிகழ்வில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அனைத்து கலை இலக்கிய,ஆற்றுகை கலைஞர்களையும் அன்பாக அழைக்கின்றோம்.




# முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார அபிவிருத்தி ஆலோசனைகள்

(அபு அலா, முபீன்)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பிரிவில் இயங்கி வருகின்ற முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரிவுக்குற்பட்ட முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்பள்ளி பாடசாலை எவ்வாறு அமையவேண்டும், அப்பாடசாலையில் எவ்வாறான விடயங்கள் உள்ளடங்க வேண்டும் என்ற விழிப்புணர்வு தகவல்களை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் வழங்கி வைத்தார்.

மேலும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்குத் தேவையானவசதிவாய்ப்புகள்போன்றவற்றைஎவ்வாறுசெய்து கொடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான நற்பண்புகள், நல்லெண்ணங்கள், நற்சிந்தனைகள் போன்றவற்றை எவ்வாறு போதிக்க வேண்டும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் அவர்களுக்குத் தேவையான போசாக்கு நிறைந்த உணவுப் பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் எடுத்துரைத்தார்.



# நாடாளுமன்றில் ஹக்கீம் எம்.பி. எழுப்பிய கேள்வி



(யஸீர் அறபாத்).

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை வாய்மூல கேள்விக்கான நேரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரிடம் கொவிட் உடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட பிரதேசம், மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் பல கேள்விகளைக் கேட்டிருந்தார்.

மேலதிக கேள்வியாக ரவூப் ஹக்கீம் பின்வருமாறு கேள்வியைத்தொடுத்தார்.

கொவிட்டினால் மரணித்த 3000 இற்கு மேற்பட்டவர்களின் உடல்கள் இந்த மயானத்தில் நல்லடக்கம் செய்ததாக குறிப்பிட்டார்.அவருக்கு தெரியும் நான் அவ்வட்போது சுகாதார அமைச்சரிடம் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்றேன், அறிவியல் சாராத முறையில் நிலக்கீழ் நீர் மிகவும் ஆழமாக இருக்கின்றதான பிரதேசங்களில் இந்த நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்கின்ற கருத்தின் காரணமாக இவ்வாறான அழுத்தங்களுக்கு பெருமளவிலான மக்கள் முகம் கொடுத்தார்கள்.

அவர்களுடைய உறவினர்கள், நண்பர்களுக்கும் இறுதி மரியாதை செலுத்துவதற்கு கூட வாய்ப்பு இல்லாமல் தூரப்பிரவேசங்களுக்கு கொண்டு சென்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

நான் கேட்பது இந்த மஜ்மா நகர் என்கின்ற பிரதேசம் ஓட்டமாவடி பிரதேச செயலக ஆளுகை பிரதேசத்திற்குள் வரும் மிகவும் கஷ்டமான அதேபோல் ஏழ்மை நிலையில் இருக்கின்றதான சுமார் 300 குடும்பங்கள் வாழ்கின்ற பிரதேசம். அந்தப் பிரதேசத்தில் அவர்கள் பயிர்செய்கையில் ஈடுபட்டு வந்ததற்கான உரிமங்கள் உடைய காணிகளைக் கொண்டிருப்பவர்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கின்றது.

இதை கையகப்படுத்திய காரணத்தால் இதில் பத்து பேர் மேல் முறையீடு செய்திருக்கின்றார்கள் அல்லது விண்ணப்பித்திருக்கின்றார்கள்.தங்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட வேண்டும் என்று. ஆகவே, பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் இது கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

தயவுசெய்து இது சம்பந்தமாக அவசரமாக நடவடிக்கை மேற்கொண்டு அரச காணிகள் அன்மித்த பிரதேசத்தில் இருக்குமாயின் அத்தகைய காணிகளைப் பெற்று இழந்த காணிகளுக்கு உண்மையில் உரிமைதாரர்கள் இருக்கின்றார்கள், அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?என்றவாறு தனது வினாவை ரவூப் ஹக்கீம் தொடுத்தார்.

குறித்த வினாவுக்கு பதிலளித்த அமைச்சர், இது அரச காணியாகத்தான் இருந்தது ஆனாலும், தனியார் துறையினர் மேட்டு நில பயிர்ச்செய்கைக்காக இதை ஈடுபடுத்தி இருக்கின்றார்கள். அந்த காணி தான் இப்பொழுது மயானமாக பயன்படுத்துவதற்காககையகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூறியது போலே மாற்று காணிகளை வழங்குவதற்கு எவ்வித தடையும் இல்லை என்று குறிப்பிட விரும்புகின்றேன். என்று பதிலளித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது அல் ஹிலால் இல்ல விளையாட்டுபோட்டி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அல்-ஹிலால் வித்தியாலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் சாய்ந்தமருது பொலிவேரியன் மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹிதுல் நஜீம் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், கல்முனை கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம் ஜாபீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மற்றும் உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அத்துடன் பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், பாலர் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளரும் ஆசிரிய ஆலோசகருமான எஸ்.எம்.எம். அன்ஸார் ஆகியோர் நிகழ்வில் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

பிரதேச பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பாடசாலையில் பல வருட காலமாக நடைபெறாமல் இருந்த இந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது இம்முறை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.





இதில் சிறப்பாக விளையாடியதோடு மட்டுமல்லாமல், இயற்கை முறையில் இல்லத்தையும் அமைத்து முதலாம் இடத்தை தனதாக்கிய கஸ்மன் இல்லம் (பச்சை) 226 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை பெற்று வெற்றி வாகை சூடியது.



இரண்டாமிடத்தை 200 புள்ளிகளைப் பெற்று ரையான் இல்லம் (நீலம்) பெற்றுக் கொண்டதுடன், 191 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடம் சலா இல்லம் (மஞ்சள்) பெற்றுக் கொண்டது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர்
Kalaikkathir

# மருதமுனை அல்- மனார் கல்லூரிக்கு உள்ளக பூப்பந்தாட்ட அரங்கு திறப்பு

(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பைசால் காசிமின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரிக்கான உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார பிரதி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரும் கல்முனை மாநகரசபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி ஏ.எம். ரகீப்பின் கோரிக்கைக்கு அமைவாக மருதமுனை அல்-மனார் கல்லூரிக்கு 5.2 மில்லியன் ரூபா செலவில் உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு அமைக்கும் ஆரம்பகட்ட வேலைத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருந்த வேளையில் அதன் இறுதிகட்ட பணிகளுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்பின் நிதி ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்யபட்டன.

குறித்தபூப்பந்தாட்ட விளையாட்டரங்கினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம் இஎஸ்.எம்.எம் முஷாரப் ஆகியொர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேயர் , கல்லூரியின் அதிபர் , பிரதி அதிபர் , ஆசிரியர் குழாம் , பாடசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள் , பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் போன்றோரும் பிரசன்னமாகி இருந்தனர்.





# மாவட்டப் பொது வைத்தியசாலையின் தாதியர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பளத் திருத்தத்தில் தாதியர் சேவைக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளமை மற்றும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதியர்களால் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அந்தவகையில் வியாழக்கிஸ்ரீழமை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஒரு மணி நேர பணிபகிஸ்கரிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது அரசே தாதியர்களிற்கு பட்ஜெட்டில் சரியான நீதியை பெறீறுக்கொடு, 24 மணிநேரம் 365 நாள்கள் வேலை செய்தவர்களுக்கு குறைத்தது ஏன் போன்ற பதாதைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 100








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2025இல் வெளியிடப்பெற்றது